# உயர்கல்வித் துறை

## மானியக் கோரிக்கை எண். 20

## அறிவிப்புகள்
## 2024-2025


முனைவர் க. பொன்முடி

உயர்கல்வித் துறை அமைச்சர்

# உயர்கல்வித் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உயர்கல்வித் துறை சார்பில் 15 புதிய அறிவிப்புகளை வெயிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**முனைவர் க. பொன்முடி**

உயர்கல்வித் துறை அமைச்சர்

## 1. அச்சு தொழில்நுட்பம், வேதியியல் தொழில்நுட்பம், தோல் தொழில்நுட்பம் மற்றும் நெசவு தொழில்நுட்பம் ஆகிய 4 சிறப்பு பயிலகங்களில் புதிதாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப 6 புதிய பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

**(Introduction of New Emerging Diploma Courses in 4 Special Institutes of Printing Technology, Textile Technology, Chemical Technology and Leather Technology)**

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிலகங்களை மேம்படுத்தவும், மாணாக்கர்கள் சேர்க்கையை உயர்த்தவும், நவீன தொழில்நுட்பங்களை வழங்கவும், 2025-26 கல்வியாண்டு முதல் அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, 4 சிறப்பு பயிலகங்களில் பின்வரும் புதிய பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்:-

| வ. எண் | கல்லூரியின் பெயர் | முன்மொழியப்படும் பட்டய பாடப்பிரிவு | சேர்க்கை இடங்கள் |
|---|---|---|---|
| 1. | அச்சு தொழில்நுட்பப் பயிலகம் | பொதிகட்டுதல் தொழில்நுட்பம் | 60 |
| 2. | வேதியியல் தொழில்நுட்பப் பயிலகம் | நில எண்ணெய் வேதிப்பொறியியல் | 60 |
| 3. | தோல் தொழில்நுட்பப் பயிலகம் | காலணி தொழில்நுட்பம் | 60 |
| | | தோல் மற்றும் அலங்கார தொழில்நுட்பம் | 60 |
| 4. | நெசவு தொழில்நுட்பப் பயிலகம் | அலங்கார மற்றும் ஆடை தொழில்நுட்பம் | 60 |
| | | ஆயத்த ஆடை தொழில்நுட்பம் | 60 |

2. கோயம்புத்தூரில் உள்ள அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் 300 பேர் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடம் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

(Construction of Additional Boys Hostel Building with 300 capacity in Government College of Technology, Coimbatore at the cost of Rs.21.00 crore)

கோயம்புத்தூரில் உள்ள அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்க்கை பெறும் பெருமளவிலான மாணவர்கள், தங்கி படிப்பதற்கான வசதி ஏற்படுத்தித் தருவதன் மூலம், அவர்கள் கல்வியில் கவனம் செலுத்தி படிப்பினைத் தொடர முடியும் என்பதால், அக்கல்லூரியில் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் 300 மாணவர்கள் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

**3. ஈரோட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் 200 பேர் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடம் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**(Construction of Additional Boys Hostel Building with 200 capacity in Government College of Engineering, Erode at the cost of Rs.14.00 crore)**

ஈரோட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் சேர்க்கை பெறும் பெருமளவிலான மாணவர்களுக்கு இடமளிக்கவும், மாணவர்கள் கல்வி முயற்சிகளில் கவனம் செலுத்தி படிப்பினை தொடரும் நோக்கத்துடன் அக்கல்லூரியில் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் 200 மாணவர்கள் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

4. மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலக மாணவர்களுக்காக சென்னை மைய பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் 300 பேர் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடம் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

(Construction of Additional Boys Hostel Building with 300 capacity in CIT Campus, Chennai for the students of Central Polytechnic College and Special Institutions at the cost of Rs.21.00 crore)

சென்னை, தரமணியில் உள்ள மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களில் சேர்க்கை பெறும் மாணவர்கள் தங்கி பயில்வதற்கான வசதியை ஏற்படுத்தி தருவதன் மூலம் கல்வியில் கவனம் செலுத்தி பயில வேண்டும் என்ற நோக்கத்துடன், மைய பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் (CIT Campus) ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் 300 மாணவர்கள் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

**5. அனைத்து அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணவியர்களுக்கென தனி ஓய்வறைக் கட்டடம் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**(A separate refreshing room will be set up for female students studying in all Government Arts & Science and Education Colleges at the cost of Rs.8.55 crore)**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவியர்களுக்கென தனி ஓய்வறை ஒன்று தலா ரூ.5.00 இலட்சம் வீதம், 171 அரசு கல்லூரிகளில் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**6. கோயம்புத்தூர்,சேலம்மற்றும்பர்கூர்ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் ஆய்வகம், ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

**(Establishment of Artificial Intelligence and Robotics Laboratory in 3 Government Engineering Colleges at Coimbatore, Salem and Bargur at the cost of Rs.3.00 crore)**

செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் தொழில்நுட்ப ஆய்வகங்கள், மாணாக்கர்களின் திறமைகளை வளர்ப்பதிலும், திறமையான மனிதவளத்தினை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, கோயம்புத்தூர், சேலம் மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் ஆய்வகம் தலா ரூ.1.00 கோடி வீதம் மொத்தம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்த ஆய்வகம், மாணாக்கர்களுக்கு பலவிதமான பயிற்சி திட்டங்கள், பட்டறைகள் (Workshops) மற்றும் படிப்புகளை வழங்கும்.

**7. திருநெல்வேலி, தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் மின்சார வாகன தொழில்நுட்ப ஆய்வகம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

**(Establishment of Electric Vehicle Technology Laboratory in 3 Government Engineering Colleges at Tirunelveli, Dharmapuri and Erode at the cost of Rs.3.00 crore)**

மின்சார வாகன வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, மோட்டார் மற்றும் மோட்டார் கட்டுப்பாடு, மின்சார வாகன மின்கலன்கள் மற்றும் மின்கல மேலாண்மை அமைப்புகள், மின்னேற்றி, உட்பொதிக்கப்பட்ட அமைப்புகள், பொருட்களின் இணையம் மற்றும் தானியங்கி வாகன மின்னணுவியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை துரிதப்படுத்த, திருநெல்வேலி, தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் மின்சார வாகன தொழில்நுட்ப ஆய்வகம், தலா ரூ.1.00 கோடி வீதம், மொத்தம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**8. காரைக்குடி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் உள்ள 2 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருட்களின் இணையம் ஆய்வகம் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

**(Establishment of Internet of Things Laboratory In 2 Government Engineering Colleges at Karaikudi and Bodinayakanur at the cost of Rs.2.00 crore)**

மாணாக்கர்கள், பொருட்களின் இணைய பயன்பாடுகள் மற்றும் பிற மேம்பட்ட உட்பொதிக்கப்பட்ட அமைப்பு அடிப்படையிலான திட்டத்தை உருவாக்க, காரைக்குடி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் உள்ள 2 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருட்களின் இணையம் ஆய்வகம் (Internet of Things Laboratory), தலா ரூ.1.00 கோடி வீதம் மொத்தம் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**9. வேலூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருள்சேர் உற்பத்தி ஆய்வகம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

**(Establishment of Additive Manufacturing Laboratory in 3 Government Engineering Colleges at Vellore, Thanjavur and Tiruchirappalli at the cost of Rs.3.00 crore)**

பொருள்சேர் உற்பத்தியானது (Additive Manufacturing) பொருள் கழிவுகள், சரக்கு மற்றும் பல்வேறு வகையான தொகுப்பு செயல்பாடுகளை குறைக்க உறுதியளிக்கிறது. இந்த மையம் தொழில்துறை, அரசு மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஒருங்கிணைத்து நிலையான தயாரிப்புகளுக்கான மேம்பாடு, குறைந்த செலவில் அதிக உற்பத்தித்திறனைக் கொண்டிருப்பது, தொடர்புடைய கல்வி மற்றும் பயிற்சியை

ஆதரிப்பது மற்றும் பல நோக்கங்களைக் கொண்டுள்ளதாகும்.

எனவே, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருள்சேர் உற்பத்தி ஆய்வகம், தலா ரூ.1.00 கோடி வீதம், மொத்தம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

10. GATE, IES, CAT, GMAT, GRE, IELTS மற்றும் TOEFL உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை 500–லிருந்து 1,400–ஆக உயர்த்தப்படும். இதற்காக கூடுதலாக ரூ.77.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

(Enhancement of Beneficiaries from 500 to 1,400 students to provide Intensive Coaching for Competitive Examinations including GATE, IES, CAT, GMAT, GRE, IELTS and TOEFL. Additional fund of Rs.77.00 lakh will be allotted)

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பொறியியல் பட்டதாரிகளின் முதுகலை படிப்பை ஊக்குவிக்கவும், அவர்களின் வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்தவும், ஒரு மாணாக்கருக்கு ரூ.8,500/- வீதம் ரூ.42.50 இலட்சம் செலவில் 500 மாணாக்கர்களுக்கு GATE, IES, CAT, GMAT, GRE, IELTS மற்றும் TOEFL போன்ற போட்டித் தேர்வுகளுக்கு

தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாணாக்கர்களிடையே ஏற்பட்டுள்ள சிறந்த வரவேற்பின் அடிப்படையில், போட்டித் தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 500-லிருந்து 1,400-ஆக உயர்த்தப்படும். இதற்காக கூடுதலாக ரூ.77.00 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**11. அரசு பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்படும்.**

**(Capacity Building Training will be provided to the faculties of Government Engineering and Polytechnic Colleges at the cost of Rs.2.00 crore)**

தற்போதைய நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப அரசு பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்காக திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின் மூலம் தொழிற்சாலைகளின் தற்போதைய அதிநவீன தேவைகளுக்கேற்ப, ஆசிரியர்களுக்கு நீண்டகால மற்றும் குறுகியகால பயிற்சி வகுப்புகளும், கருத்தரங்குகளும், பயிற்சிப் பட்டறை வகுப்புகளும் நடத்தப்படும். இதற்காக,

தொடர் செலவினமாக ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 12. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தேவையான தளவாடங்கள் ரூ.7.05 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**(Procurement of equipment for the Government Arts and Science Colleges at a cost of Rs.7.05 crore)**

2022-23 மற்றும் 2023-24-ஆம் ஆண்டுகளில் துவங்கப்பட்ட 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளிலிருந்து அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்ட 27 அரசுக் கல்லூரிகள் என ஆக மொத்தம் 48 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தேவைப்படும், ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கான இருக்கைகள், மேசைகள் மற்றும் வகுப்பறைகளுக்கான செராமிக் கரும்பலகைகள் ஆகிய தளவாடங்கள் ரூ.7.05 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

## 13. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் செயல்படும் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மீளுருவாக்கம் செய்யப்படும்.

**(Revamping of Tamil Nadu Historical Research Council, functioning in Tamil Nadu Archives)**

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம், மாறிவரும் காலத்திற்கேற்ப மீளுருவாக்கம் செய்யப்பட்டு, தமிழ்நாட்டின் வரலாறு குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படும். ஆண்டுதோறும் இதுகுறித்து 10 முதல் 15 ஆய்வுகள் வரை மேற்கொள்ளப்படும்.

**14. திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மையம் கோளரங்கத்தில் வேடிக்கை அறிவியல் காட்சிக்கூடம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**(Establishment of a Fun Science Gallery in Anna Science Centre – Planetarium, Tiruchirappalli at the cost of Rs.30.00 lakh)**

திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மையம் கோளரங்கத்தில், அறிவியலின் அடிப்படைக் கருத்துக்களை எளிமையாகவும் பொதுமக்கள் மற்றும் மாணாக்கர்கள் புரிந்து கொள்ளும் விதமாக, “வேடிக்கை அறிவியல் காட்சிக்கூடம்” ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 15. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்களின் சேர்க்கை அதிகரித்தல்.

(Increase in admission of students in Arts and Science Colleges)

2023-24-ஆம் கல்வியாண்டில், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக அளவில் தேர்ச்சி பெற்று, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு பெருவாரியான மாணாக்கர்கள் விண்ணப்பித்துள்ளனர். அவர்களுள் ஒப்பளிக்கப்பட்ட மாணாக்கர் சேர்க்கை விகிதம் போதிய அளவு இல்லாத நிலையில், அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்த போதிலும் பல மாணாக்கர்கள், கல்லூரிகளில் சேர்க்கை பெற வழிவகை இல்லாத நிலை உள்ளது.

மேலும், இம்மாணாக்கர்கள் வேறு கல்லூரிகளிலும் சேர்ந்திட வாய்ப்பில்லாத நிலையில், இந்த கல்வியாண்டு அவர்களுக்கு வீணாகும் நிலை உள்ளது. இதனை கருத்திற் கொண்டு, கலை

மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 2024-25-ஆம் கல்வியாண்டில், அரசு கல்லூரிகளில் 20%-மும், அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 15%-மும் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் 10%-மும் மாணாக்கர் சேர்க்கை அதிகரிக்கப்படுகிறது.

**முனைவர் க. பொன்முடி**

உயர்கல்வித் துறை அமைச்சர்